# அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
## (எச்-பிரிவு)

H7/SCH/2021 நாள்:09-08-2021 (09-08-2021)

### சுற்றறிக்கை

**பொருள்:** ஆதிதிராவிடர் பழங்குடியினர் மதம் மாறிய கிறிஸ்தவ ஆதிதிராவிடர் மாணாக்கர்கள் 2021-2022 ஆண்டிற்கான போஸ்ட் மெட்ரிக் கல்வி மற்றும் உயர்கல்வி சிறப்பு கல்வி உதவித்தொகை பெறுவதற்கு உரிய விண்ணப்பங்கள் துறைவாரியாக சமர்ப்பிப்பது –தொடர்பாக.

**பார்வை**: அரசின் சுற்றறிக்கை எண்:W/3/15397/2021 நாள் :23.06.2021.

****

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பல்வேறு துறைகளில் கல்வி பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர், மதம் மாறிய கிறிஸ்தவ ஆதிதிராவிடர் SC/ST/SCCC வகுப்பைச் சார்ந்த முதலாம் ஆண்டு மற்றும் புதுப்பித்தல் மாணாக்கர்கள் 2021-2022 கல்வி ஆண்டுக்குறிய கல்வி உதவித்தொகை பெற அதற்குறிய விண்ணப்பத்தினை தங்கள் துறையில் பெற்று அதனை பூர்த்தி செய்து துறைத்தலைவர் சான்றுடன் தேவையான இணைப்புகளான சாதி சான்றிதழ், வருமான சான்றிதழ், வங்கி கணக்கு, பத்தாம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு மதிப்பெண் பட்டியல், வருகை சான்றிதழ் மற்றும் தேவையான ஆவணங்கள் அனைத்தையும் இணைத்து கல்வி உதவித் தொகைக்கான விண்ணப்பங்கள் அனைத்து இணைப்புகளுடன் சம்பந்தப்பட்ட துறை வழியாகத்தான் "H" பிரிவில் சமர்பிக்க வேண்டும். விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டதற்கு முக்கிய ஆதாரமாக ஒப்புகை சீட்டை (Acknowledgement) "H" பிரிவில் அந்தந்த பாடப்பிரிவு தொடர்புடையவர்களிடம் பெற்றுக் கொள்ள வேண்டும். மேலும், எக்காரணத்தைக் கொண்டும் மாணாக்கர்கள் கல்வி உதவித்தொகை விண்ணப்பத்தை நேரடியாகச் "H" பிரிவில் சமர்ப்பிக்காமல் துறை வழியாக சமர்ப்பிக்க வலியுறுத்தப்படுகிறது.

**2. விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்கள் கவனத்திற்கு**, விடுதி மாணாக்கர்கள் உயர்கல்வி சிறப்பு கல்வி உதவித்தொகைக்கான (Special Scholarship) பூர்த்தி செய்யப்பட வேண்டிய விண்ணப்பங்களை குறிப்பிட்ட விடுதி காப்பாளரிடம் மாணாக்கர்கள் பெற்றுக் கொள்ளவும். பின்பு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் விடுதி காப்பாளர் வழியாகவே "H" பிரிவில் சமர்ப்பிக்க கோரப்படுகிறது. விடுதியில் உள்ள உயர் கல்வி சிறப்பு கல்வி உதவி தொகை தொடர்பான அலுவலர்கள் மாணாக்கர்களிடமிருந்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை பெற்று விண்ணப்பத்தில் உள்ள தகவல்களை **Excel** ஆங்கிலத்தில் டைமஸ் நியூ ரோமன்(Times Newroman) எழுத்தைப் பயன்படுத்தி கணினி மூலம் தயார் செய்து annamalaischolar@gmail.com என்ற மின்னஞ்சல் மூலம் "H" பிரிவில் சமர்ப்பிக்க ஆவண செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. உயர்கல்வி சிறப்பு கல்வி உதவி தொகை பெற 2021- 2022 ஆண்டு விண்ணப்பிக்கும் விண்ணப்பத்தில் முதலாமாண்டு **Fresh** புதுப்பித்தல் **Renewal** மாணாக்கர்கள் புதிய வருமான சான்றிதழை இணைக்குமாறு கோரப்படுகிறது. மேலும் மாணவர்களின் பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.2.50 லட்சத்திற்கு மிகாமல் உள்ள மாணாக்கர்கள் மட்டும் கல்வி உதவித்தொகை மற்றும் கல்வி உயர்கல்வி சிறப்பு கல்வி உதவித்தொகை பெற தகுதி உடையவர்கள்.

3. **வங்கிகணக்கு**: 2021-2022 ஆம் கல்வி ஆண்டு முதல் மாணாக்கர்கள் கல்வி உதவித்தொகையை உடனடியாக பெறுவதில் ஏற்படும் நடைமுறை சிக்கல்கள் மற்றும் கால தாமதத்தை தவிர்க்கும் பொருட்டும் மாணாக்கர்கள் உடனடியாக அரசு வழங்கும் கல்வி உதவித்தொகை பெறும்பொருட்டும் SC/ST/SCCC மாணாக்கர்கள் **இந்தியன் வங்கி கணக்கு** எண்ணை சமர்ப்பிக்க கோரப்படுகிறது. மற்ற வங்கி கணக்கு எண்ணை சமர்ப்பித்தால் மிகவும் காலதாமதம் ஆகிறது என்பதையும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. பார்வை 1ல் குறிப்பிட்டுள்ள அரசின் சுற்றறிக்கையை நகல் அனைத்து புலமுதல்வர்கள் மற்றும் விடுதிக்கும் முன்பே வழங்கப்பட்டுள்ளது. எனவே அரசின் சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள தகவல்களை மாணாக்கர்களுக்கு தெரிவிக்க நினைவூட்டப்படுகிறது.

பதிவாளர்(பொ)

பெறுதல்:

1. அனைத்து புலமுதல்வர்கள்
2. அனைத்து துறை தலைவர்கள்
   (இச்சுற்றறிக்கையினை அனைத்து மாணவ/மாணவியர்களுக்கு வகுப்புகளில் தெரிவிக்க கோரப்படுகிறது.)
3. விடுதி ஒருங்கிணைப்பாளர்
4. அனைத்து விடுதி காப்பாளர்கள்
5. சுற்றறிக்கையை அறிவிப்பு பலகை வாயிலாக மாணவ/மாணவியர்களுக்கு தெரிவிக்க வலியுறுத்தப்படுகிறது.

நகல்:

1. துணைவேந்தரின் நேர்முக உதவியாளர்
2. பதிவாளரின் நேர்முக உதவியாளர்
3. அலுவலகக் கோப்பு